# பொன்னமராவதி தேர்வுநிலை பேரூராட்சி

ந.க.எண்: 429/ 2010 நாள்: 02.06.2010

## குறுகியகால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

********

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி பேரூராட்சியில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வேலைகளைச் செய்து முடிக்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பொன்னமராவதி பேரூராட்சியில் கோரப்படுகிறது. ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பெற்றுக் கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| அ. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் தொகை செலுத்தி பெற்றுக்கொள்ள கடைசி நாளும்,நேரமும் | – | 17.06.2010ம் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணி வரை. |
| ஆ. ஒப்பந்தப்புள்ளி டேவணித் தொகை செலுத்த கடைசி நாளும், நேரமும் | – | 17.06.2010ம் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணி வரை |
| இ. ஒப்பந்தப்புள்ளி போடுவதற்கான கடைசி நாளும், நேரமும் | – | 18.06.2010ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 வரை |
| ஈ. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாளும், நேரமும் | – | 18.06.2010ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு |

### நிபந்தனைகள்:

1. ஒப்பந்தப்புள்ளிகள் பொன்னமராவதி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ 2010ம் ஆண்டு ஜூன் மாதம் 18ம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.பதிவு அஞ்சல் மூலம் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்குள் கிடைக்குமாறு அனுப்பலாம். அஞ்சலக காலதாமதத்திற்கு பேரூராட்சி பொறுப்பு ஏற்காது.
2. மேற்படி ஒப்பந்தப்புள்ளி போடுவதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவத்தை 17.06.2010 நாள் வியாழக்கிழமை பேரூராட்சி அலுவலகத்தில் ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியாக அட்டவணையில் குறிப்பிட்டபடி படிவக் கட்டணம் (விற்பனை வரி உட்பட) செலுத்தி படிவம் பெற்றுக் கொள்ள வேண்டும். மேற்படி படிவத்தில் போடாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3. மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உறையின் மேல் ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் ஒப்பந்தக்காரர் பெயர், செயல் அலுவலரின் முகவரி எழுதப்பட்டு மற்றும் எந்த வேலைக்கு என்ற விபரத்தை தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒரு வேலைக்கு ஒரு ஒப்பந்தப் புள்ளிதான் அனுப்ப வேண்டும்.
4. **ஏற்கனவே, இப்பேரூராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் வேலைகள் எடுத்து குறிப்பிட்ட காலத்தில் பணி முடிக்காத ஒப்பந்தக்காரர்களுக்கு வேலைக்கான ஷெட்யூல் வழங்கப்பட மாட்டாது.**

5 ஒவ்வொரு ஒப்பந்தக்காரரும், அட்டவணையில் குறிப்பிட்ட வேலைக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள தொகையை டேவணித் தொகையாக பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி இரசீதை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். இந்த டேவணித் தொகை உரிய அதிகாரிகளால் முடிவு செய்யப்பட்டவுடன், ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படாத ஒப்பந்தக்காரர்களுக்கு திருப்பி அளிக்கப்படும். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர்களுடைய டேவணித் தொகை வேலைகளுக்கான பிணை வைப்புத் தொகையாக வைத்துக் கொள்ளப்படும்.இத்தொகைக்கு பேரூராட்சியில் மூலம் வட்டி எதுவும் கொடுக்கப்பட மாட்டாது.

6 மதிப்பீடு விலைக்குக் கூடுதலாக வேலையை செய்வதாகக் குறிப்பிடும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

7. மதிப்பீடு விலைக்குக் குறைவாக வேலையை செய்வதாக ஒப்புக்கொள்கிறவர்கள் 10% வரை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். 10% க்கு மேற்கொண்டு கூடுதலாக கோரும் சதவீதத்தொகையில் 50% தொகை கூடுதல் பிணை வைப்புத் தொகையாக செலுத்தினால்தான் அவர்களுடைய ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இதற்கு பேரூராட்சியில் வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது. கூடுதலாக பெறப்பட்ட பிணை வைப்புத்தொகை மட்டும், வேலைகள் முடிவுற்று, பணி முடிவறிக்கை பெறப்பட்டபின்னர் திரும்ப வழங்கப்படும்.
8. ஒரு வேலைக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வந்தால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
9. டேவணித் தொகை செலுத்தப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், உரிய படிவத்தில் வராத ஒப்பந்தப்புள்ளிகளும், குறித்த நேரத்திற்குப் பிறகு பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.

..2

10. மேலும், ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **"http://www.tenders.tn.gov.in"** என்ற இணைதளத்தில் பதிவு இறக்கம் செய்து கொள்ளலாம். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும்போது ஒப்பந்தப்படிவத்திற்கான தொகையை ரொக்கமாகவோ அல்லது வங்கி வரைவு வேலைமூலமாகவோ செலுத்தி ஒப்பந்தப்புள்ளி நமுனாவை சமர்ப்பிக்கலாம்.

11. அரசு ஒப்பந்தப்புள்ளி விதிகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்படும், குறைந்த விகித ஒப்பந்தப்புள்ளியைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பேரூராட்சியியைக் கட்டுப்படுத்த இயலாது. காரணங்கள் கூறாமல் ஒரு ஒப்பந்தப்புள்ளி அல்லது பெறப்பட்ட அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்கும் அதிகாரம் பேரூராட்சிக்கு உண்டு.

12. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான அறிவிப்பு கிடைத்த தேதியிலிருந்து 3 நாட்களுக்குள் குறிப்பிட்ட படிவத்தில் தவறாது சொந்தச் செலவில் ஒப்பந்தக்காரர் வேலைகளை முறையாக முடித்துத் தருவதாக கூறி ரூ.20/= மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தப்பத்திரம் பேரூராட்சிக்கு எழுதிக்கொடுக்க வேண்டும். அவ்வாறு ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுக்கத் தவறினாலோ அல்லது அதிகப்படியாக செலுத்தக்கோரிய டேவணித் தொகையை, செலுத்தத் தவறினாலோ மறு ஒப்பந்தப்புள்ளி விட்டு ஒப்பந்தப்புள்ளி டேவணித்தொகை பறிமுதல் செய்யப்பட்டு, பேரூராட்சிக்கு ஆதாயம் செய்யப்படும்.

13 ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் செலுத்திய டேவணித்தொகை இது சம்பந்தப்பட்ட கணக்குகளின் தணிக்கை முடிந்தவுடன் திருப்பிஅளிக்கப்படும். தணிக்கையாளரின் முடிவிற்கு ஒப்பந்தக்காரர் கட்டுப்பட வேண்டும். தணிக்கையில் ஆட்சேபிக்கப்பட்டுள்ள தொகையினை ஒப்பந்தக்காரர் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டும்.

14. ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டவுடன் ஒப்பந்தப்புள்ளியைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தக்காரருடைய டேவணித்தொகை பேரூராட்சிக்கு பறி முதல் செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளியை திரும்பப் பெற்றுக்கொண்டதனால் ஏற்படும் சகல சஷ்டங்களுக்கும் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் பொறுப்பாவார்.

15. ஒப்பந்தக்காரர், படிவத்தில் வேலைகள் மற்றும் சதவீதத்தினை தெளிவாக எழுதி இருக்க வேண்டும். அடித்தல், திருத்தல் இருக்கக்கூடாது. அவ்வாறு இருப்பின் அடிக்கப்பட்ட இடங்களில் ஒப்பந்தக்காரர் கையொப்பமிட்டிருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள இலக்கங்கள் எண்ணாளும், எழுத்தாலும் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

16. ஒப்பந்தக்காரர், ஒப்புக் கொள்ளப்பட்ட வேலைக்கு சப்ளை செய்யப்படும் பொருட்கள் தரமானதாகவும், ஆய்வு செய்யும் அலுவலர்கள், பொறுப்பாளர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். தரமானதாக இல்லை என நிராகரிக்கப்பட்டால் அவ்வாறு நிராகரிக்கப்பட்ட பொருட்களை 24 மணி நேரத்திற்குள் வேலை செய்யும் இடத்தில் இருந்து ஒப்பந்தக்காரர் தனது சொந்த பொறுப்பில் அகற்றிக்கொள்ள வேண்டும்.

17. வேலைகள் எடுத்துச் செய்யும் ஒப்பந்தக்காரர்கள் பணி முடித்தவுடன் அதிலிருந்து எடுக்கப்பட்ட மண், கல் போன்றவைகளையும் உடனடியாக மதிப்பீட்டின்படி தனது சொந்த பொறுப்பிலேயே அப்புறப்படுத்த வேண்டும். தவறினால், பட்டியல் அனுமதிக்கப்படமாட்டாது.

18. இதில் குறிப்பிட்டுள்ள வேலைகளில் வேலை முடிவுற்று, ஆறு மாத காலத்திற்குள் அதில் ஏதேனும் பழுதுகள் ஏற்பட்டால் அதனை ஒப்பந்தக்காரர் தனது சொந்த பொறுப்பில் சரி செய்து கொடுக்க வேண்டும். தவறினால், ஒப்பந்தக்காரர் செலுத்தியுள்ள பினை வைப்புத்தொகையிலிருந்து பேரூராட்சியால் பழுது பார்க்கப்படும்.

19. ஒப்பந்த பத்திரம் எழுதி முடித்த தேதியிலிருந்து ஒரு வார காலத்திற்குள், வேலையை துவக்கி குறிப்பிட்ட கால அளவிற்குள் வேலையை முடிக்க வேண்டும். Engineering Manual படி, பணி ஒப்பந்த காலத்திற்குள் ஒப்பந்தகாரரால் முடிக்கப்படாத பட்சத்தில், ஒப்பந்தகாலத்தை நீட்டிப்பு செய்யும் பட்சத்தில் பணியின் மதிப்பில் 5 சதவீதம் கூடுதல் அபராதத் தொகை விதித்து பணியினை முடிக்க கால நீட்டிப்பு செய்ய நடவடிக்கை எடுத்து, அபராதத் தொகை பட்டியலில் ஈடு செய்யப்படும்.. வேலையை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்படவில்லையெனில், அதனால் பேரூராட்சிக்கு ஏற்படும் நஷ்டத்தை வசூலிக்க நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். அபராதக்கட்டணம் விதிக்கப்பட்டதற்கு பின்பும் வேலை முடிக்கப்படவில்லையெனில் பிணை வைப்புத்தொகையை பறிமுதல் செய்யவும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரி வேலையை முடிக்கவும், பேரூராட்சிக்கு முழு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் இழப்பீடுகளுக்கு ஒப்பந்தக்காரரே முழு பொறுப்பாகும்.

20. தனது சொந்த பொறுப்பிலேயே ஒப்பந்தக்காரர் தார் மற்றும் சிமெண்ட் வாங்கி பயன்படுத்த வேண்டும். அதற்கு தொழில்நுட்ப அலுவலரின் சான்று பெறப்பட வேண்டும், அதற்கான ரசீதுகள் பட்டியலுடன் இணைக்கப்பட வேண்டும்.

21. பட்டியலில் விதிமுறைகளின்படி வேலைகளுக்கு வருமானவரி மற்றும் விற்பனைவரி கண்டிப்பாக பிடித்தம் செய்யப்படும்.

22. ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு மன்ற ஒப்புதலுக்கு பிறகு பேரூராட்சியின் நிதி நிலையை அனுசரித்து பணி ஆணை வழங்கப்படும். இதில் செயல் அலுவலர் நிதி நிலைக்கு ஏற்ப உசிதம் போல் செயல்பட அதிகாரம் உண்டு.

23. ஒப்பந்தக்காரர்கள் இப்பேரூராட்சியில் தொழில்வரி மற்றும் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய அனைத்து வரியினங்களையும் முறையாக செலுத்தப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு செலுத்தாத ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

24. பணி ஆணை பெறப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் தாங்கள் மேற்கொள்ளும் பணியின் முன்னேற்றத்தை பணி துவக்கும் முன், பணி நடைபெறும்போது, பணி முடிவுற்றவுடன் உள்ள நிலைகளை புகைப்படம் எடுத்து சமர்ப்பித்ததால் மட்டுமே பட்டியல் தொகை வழங்கப்படும்.

25. பணி நடைபெறும் போதே பணியின் பெயர், திட்ட விவரம், மதிப்பீடு, ஒப்பந்தக்காரர் பெயர் உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய விளம்பர பலகை வைக்கப்பட வேண்டும்.

26. Engineering Manual படியும் IS456 2000-ன் படி உரிய பணியில் ஒப்பந்தக்காரரின் பெறுப்பில் உரிய விதிமுறைகளின்படி சோதனைகள் செய்யப்படும்.

27. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள் மற்றும் அவ்வாரியத்தின் அனுபவம் பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இதில் கலந்துகொள்ளள வேண்டும்

28. Engineering Manual படி, ஒரு பொறியியல் பட்டம் கட்டிட பொறியியலில் தேர்ச்சி பெற்ற பொறியாளரை பணி துவங்கி முடிக்கும் நாள் முடிய இப்பணிக்கு ஈடுபடுத்தப்பட்டு மதிப்பீட்டுத் தொகைக்கு உட்பட்டு பணியினை முழுமையாக முடித்து பயனீட்டிற்குவிட ஈடுபடுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.3000/= பிடித்தம் செய்து பட்டியலில் தொகை ஈடு செய்யப்படும்.

29. ஒப்பந்த ஆணை வழங்கும்போது மதிப்பீட்டுத் தொகையில் 1% தொகை வைப்புத் தொகையாக செலுத்தப்பட வேண்டும். மேலும், பகுதி பட்டியல் வழங்கும்போது 5% with Held Amount பிடித்தம் செய்யப்படும். பணி முடிவறிக்கை ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே இறுதி பட்டியல் தொகை ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படும்.

30. பணிகளின் ஒவ்வொரு நிலையிலும் உதவி செயற்பொறியாளரின் சோதனை அளவு பெறப்பட வேண்டும்.

31. இப்பணியில் தணிக்கைத்தடை மூலம் நிதி இழப்பு ஏற்படும் பட்சத்தில் ஒப்பந்தக்காரரின் வைப்புத்தொகையில் இருந்து ஈடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

32 பணிகள் நடைபெறும் பொழுது ஒவ்வொரு நிலையிலும் தரச்சான்று ( Test Certificate ) ஒப்பந்தக்காரர் தனது சொந்த பொறுப்பில் பெற்றுத்தரவேண்டும். மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணி செய்தமைக்கான முன் அனுபவச்சான்று பெற்றுத்தர வேண்டும்.

**அடிப்படை கட்டமைப்பு மற்றும் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்பு திட்டம் 2009–10**

| எண் | வேலையின் விவரம் | மதிப்பீடு (இலட்ச த்தில்) | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை(விற்பனை வரி உட்பட) | வைப்புத் தொகை | வேலைமுடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | பொன்னமராவதி பேரூராட்சி வார்டு எண் 9, பெருமாள் கோயில் வீதி சர்வே எண் 975–ல் 3 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல் | **27.00** | 9000+202 | **67500** | 3 மாதம் |

செயல் அலுவலர்,
பொன்னமராவதி தேர்வுநிலை பேரூராட்சி

பெறுநர்: இப்பேரூராட்சியில் பதிவு செய்யப்பட்ட அனைத்து ஒப்பந்தக்காரர்களுக்கும்.

நகல்:

1. திருச்சி மண்டலம், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், அவர்களின் மேலான தகவலுக்காக பணிந்தனுப்பப்பட்டது.
2. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், புதுக்கோட்டை மண்டலம், மாவட்ட ஆட்சியரகம் புதுக்கோட்டைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.
3. இளநிலைபொறியாளர், கீரனூர் பேரூராட்சி.
4. பொன்னமராவதி தேர்வுநிலை பேரூராட்சி தலைவர், துணைத்தலைவர் மற்றும் பேரூராட்சி மன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் – தகவலுக்காக.
5. அலுவலக தகவல் பலகைக்கு.

# PONNAMARAVATHY TOWN PANCHAYAT

**PUDUKKOTTAI DISTRICT**

## INFRASTRUCTURE GAP FILLING FUND 2009-2010

## INVITATION FOR BIDS

**Roc.No : 429/2010** **Date : 02.06.2010**

1. **The Executive Officer, Ponnamaravathy Town Panchayat invites bids for the works details in the table. The bidders may submit bids for any or all of the works mentioned in the table.**
2. **Bidding documents may be purchased from the office of Executive Officer, Ponnamaravathy Town Panchayat upto 17.06.2010 on all working days. For the non-refundable fee as indicated, in the form of Cash or Demand Draft on any Scheduled Bank Payable at Ponnamaravathy in favor or Executive Officer, Ponnamaravathy Town Panchayat. Interested bidders may obtain further information at the same address**
3. **Bids must be accompanied by security of the amount specified for the work in the table, payable at Ponnamaravathy Drawn in favor of Executive Officer, Ponnamaravathy Town Panchayat.**
4. **Bids must be delivered to the Executive Officer, Ponnamaravathy Town Panchayat on or before 18.06.2010 on 3.00 Pm and will be opened on the same day at 3.30Pm, in front of the bidders who wish to attend. If the Office happens to be closed on the date of receipt of the bids as specified, the bids will be received and opened on the next working day at the same time and venue**
5. **Other details can be seen in the bidding documents**
6. **Details instructions and specifications will be given at the time of issue of Tender documents.**
7. **The Tender documents for the works given in the website "http://www.tenders.tn.gov.in" The bidders can download the documents and submit tenders by enclosing the cost of Tender schedule and tender deposit in the form of Cash or D.D. Drawn in favor of the Executive Officer, Ponnamaravathy Town Panchayat, payable at Ponnamaravathy.**

**PONNAMARAVATHY TOWN PANCHAYAT**

**INFRASTRUCTURE GAP FILLING FUND 2009-2010**

**TABLE**

| Sl. No. | Name of Works | Estimate Amount | EMD | Schedule Cost | Sale Tax and surcharge | Total | Period of Complet ion |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Construction of 3,00,000 Litres Capacity Service Reservoir with Two Outlets, Pipe Connection Near Perumal Kovil and laying of Raising main from Vaiyapuri Road to Proposed OHT near Perumal Kovil at Ponnamaravathi Town Panchayat, Pudhukottai District. | 27,00,000 | 67500 | 9000 | 202 | 9202 | 90 Days |

**Executive officer,**
**Ponnamaravathy Town Panchayat,**
**Pudukkottai District.**